தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 97/பேரூ/2021

நாள் 27.01.2022

திரு. C. ராஜவேலு,
சத்துவாச்சாரி, வேலூர் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
சோளிங்கர் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, H.4 பாலார் கார்டன் என்ற முகவரியில் இயங்கிவரும் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை பணியாளர்கள் சங்கம் என்ற அமைப்பின் மாநில கௌரவத் தலைவர் திரு. C. ராஜவேலு என்பவரின் 24.06.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.07.2020ல் பெறப்பட்டு, 97/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, H.4 பாலார் கார்டன், என்ற முகவரியில் இயங்கிவரும் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை பணியாளர்கள் சங்கம் என்ற அமைப்பின் மாநில கௌரவத் தலைவர் திரு. C. ராஜவேலு என்பவரின் 24.06.2020 நாளிட்ட முறையீட்டு மனுவில் திரு. ப. பிரகாஷ் என்பவர் சோளிங்கர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றியபோது ஊழல் செய்து சர்வே எண்.252/2, 252/8ல் ரூ.40 லட்சத்திற்கு தனது மனைவி திருமதி. ரஞ்ஜனி துர்காதேவி பெயரில் 2017ல் வீடு வாங்கியுள்ளார் என்றும், இதற்கு சோளிங்கர் இந்தியன் வங்கியில் ரூபாய் 26 லட்சத்திற்கு கடன் வாங்கி அதற்கு தானே ஜாமின் போட்டுள்ளார் என்றும், இதன் விவரங்கள் தனியரது பணிப்பதிவேட்டில் பதியப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், தனியருக்கு பரம்பரை சொத்தும் இல்லை எனவும், மொத்தமாக லஞ்சப் பணத்தில் வாங்கியது என்றும் எனவே, அவர் மீது

நடவடிக்கை எடுத்து அந்த வீட்டை ஜப்தி செய்ய உத்தரவிடுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும், திரு. பா. பிரகாஷ், இளநிலை உதவியாளர், ஒடுகத்தூர் பேரூராட்சி ரூ.5 லட்சம் உயர் அலுவலர்களுக்கு லஞ்சமாகக் கொடுத்து, தகுதியில்லாத பதவி உயர்வு பெற்றுள்ளார். அதாவது, சேலம் மாவட்டம், பூலாம்பட்டி இரண்டாம் நிலை பேரூராட்சிக்கு தற்போது செயல் அலுவலராக பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்துள்ளார். அவர் 2016–2017ல் 17B குற்றக்குறிப்பாணை தண்டனை பெற்றுள்ளார். அவரை 01.01.2018ல் முதுநிலைப்பட்டியலில் சேர்த்துள்ளார்கள். இது அரசு விதிகளை மீறிய செயலாகும். அரசு கடித எண்.248 P&AR நாள் 21.10.1997 மற்றும் அரசு கடித எண்.57216/S/99–1 நாள் 01.10.1999ன்படி குற்றக்குறிப்பாணை பெற்று தண்டனை பெற்றவர்களுக்கு ஐந்தாண்டுகளுக்கு பதவி உயர்வு வழங்கக்கூடாது என உள்ளது. அதன்படி அவர் 01.10.2022ல் மட்டுமே பதவி உயர்வுக்கு தகுதியுடையவராவார். இந்த நிலையில், பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் எண்.3228/2020/A7 நாள் 12.05.2020ன்படி வரிசை எண்.3–ல் அவருக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இது முறையற்ற பதவி உயர்வாகும். அவர் ஒடுகத்தூர் பேரூராட்சியில் இருக்கும்போது இந்த பதவி உயர்வு வந்துள்ளது. தற்போது சேலம் மாவட்டம் பூலாம்பட்டி இரண்டாம் நிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றுகிறார். எனவே, திரு. பா. பிரகாஷ், செயல் அலுவலர் மீது விசாரணை மேற்கொண்டு உரிய ஆணைகளை பிறப்பிக்குமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

மனுதாரர் தமது புகார் மனு தொடர்பாக அளித்துள்ள ஆதார ஆவணங்களில், பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.3228/2020/அ7 நாள் 12.5.2020ல் இளநிலை உதவியாளர்/வரித்தண்டலர்/தட்டச்சர் நிலையில் ஒருங்கிணைந்த பணி முன்னுரிமை பட்டியலின் அடிப்படையில் பேரூராட்சிகள் அலகில் காலியாகவுள்ள இரண்டாம்நிலை செயல் அலுவலர்/தலைமை எழுத்தர்/உதவியாளர் பணியிடங்களில் தற்காலிக பதவி உயர்வு அளித்தல் மற்றும் பணியிடம் வழங்கி வெளியிடப்பட்ட ஆணையின் நகலினை இணைத்தனுப்பியுள்ளார். அதன்படி, வரிசை எண்.3ல் இடம்பெற்றுள்ள திரு. பி. பிரகாஷ், இளநிலை உதவியாளர், ஒடுகத்தூர் பேரூராட்சி, வேலூர் மாவட்டம் மற்றும் வேலூர் மண்டலம் அவர்களுக்கு செயல் அலுவலர் (நிலை–2), பூலாம்பட்டி பேரூராட்சி, சேலம் மாவட்டம், சேலம் மண்டலத்தில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. தனியருக்கு பணியிடம் வழங்குவதை நிறுத்திடக் கோரி பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் அரசுக்கு மின்னஞ்சல் மூலமாக மனுதாரர் அனுப்பிவைத்திட்ட 13.5.2020 நாளிட்ட புகார் மனுவின் நகலினையும் மனுதாரர் சமர்ப்பித்துள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு பெறப்பட்ட காலம் கொரோனா தொற்று பரவல் அதிகமாக இருந்த நிலையில், நிர்வாக ரீதியில் ஏற்பட்ட மாற்றங்களினால் மனுதாரரது புகார் மனு மீது நடவடிக்கை நிலுவையில் இருந்துவந்தது. இதனிடையே, மனுதாரர் திரு. பி. பிரகாஷ், இளநிலை உதவியாளருக்கு செயல் அலுவலர் பதவி உயர்வு வழங்கி வழங்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநரது செயல்முறை ஆணை.ந.க.எண்.3228/2020/A7 நாள் 12.5.2020க்கு இடைக்கால தடை விதிக்கக் கோரி மாண்பமை உயர்நீதிமன்றம்

சென்னையில் நீதிப்பேராணை (W.P.No.3980/2021) மனுதாரரான திரு. C. ராஜவேலு என்பவரால் தாக்கல் செய்யப்பட்டு, அவ்வழக்கில் நான்காவது எதிர்மனுதாரராக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரையும் சேர்த்து வழக்கு தொடரப்பட்டது.

3. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014, பிரிவு 10 (3) (b)ன்படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள பொருட்பாடு எதனையும் முறைமன்ற நடுவர் விசாரணை செய்தல் கூடாது என்பதால், திரு. பா. பிரகாஷ் என்பவருக்கு செயல் அலுவலராக பதவி உயர்வு அளித்து வழங்கப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநரது செயல்முறை ஆணைக்கு இடைக்கால தடை கோரியும், அவருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வினை ரத்து செய்வது குறித்தும் மனுதாரரால் மாண்பமை உயர்நீதிமன்றம், சென்னையில் தொடுக்கப்பட்ட நீதிப்பேராணை (W.P.No.3980/2021) நிலுவையில் உள்ளதால், தனியருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வு குறித்து மேற்படி வழக்கில் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் துறைத் தலைமையினால் முடிவெடுக்கப்படும் என்பதால், மனுதாரரின் புகார் மனுவில் திரு. பா. பிரகாஷ், இளநிலை உதவியாளராக பணிபுரிந்த காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக லஞ்சப்பணத்தில் அவரது மனைவி திருமதி. ரஞ்ஜனி துர்காதேவி பெயரில் வீடு வாங்கியுள்ளது குறித்து மட்டும் விசாரணை மேற்கொள்ளலாமென இம்முறைமன்ற நடுவம் கருதியது.

4. அதன் அடிப்படையில், தனி அலுவலர்/உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), வேலூர் மண்டலம், வேலூர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 25.11.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் 26.10.2021 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திரு. சி. ராஜவேலு மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம் மற்றும் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) பணியாற்றும் திருமதி. கெ. ரேவதி ஆகியோர் 25.11.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

5. மனுதாரர் திரு. சி. ராஜவேலு 25.11.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றியபோது திரு. பா. பிரகாஷ் என்பவர் தனது மனைவி திருமதி ரஞ்ஜனி துர்காதேவி என்பவரின் பெயரில் ரூ.40 லட்சம் (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) மதிப்பீட்டில் சர்வே எண்.252/2, 252/8ல் வீடு வாங்கியுள்ளார். இந்தியன் வங்கியில் ரூ.26 லட்சத்திற்கு (ரூபாய் இருபத்தாறு லட்சம் மட்டும்) கடன் வாங்கி அவ்வீட்டை வாங்கியிருந்தாலும், அவ்விவரத்தையோ அல்லது வீடு வாங்கியது தொடர்பான விவரத்தையோ தனது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. மேலும், முறையற்ற பதவி உயர்வு மேற்கண்ட திரு. பிரகாஷ் என்பவருக்கு பேரூராட்சி நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு சம்மந்தப்பட்ட பிரகாஷ் என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும், திரு. பிரகாஷ் என்பவருக்கு பதவி உயர்வு வழங்கியது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று நிலுவையில் உள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

6. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர் மற்றும் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலராக (பொறுப்பு) பணியாற்றும் திருமதி. கெ. ரேவதி ஆகியோர் 25.11.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "வேலூர் மாவட்டம், ஒடுகத்தூர் பேரூராட்சி முன்னாள் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு. பா. பிரகாஷ் (தற்பொழுது செயல் அலுவலர், கல்லுக்கூட்டம் பேரூராட்சி (தற்காலிகம்) என்பவர், அவர் இளநிலை உதவியாளராக ஒடுகத்தூர் பேரூராட்சியில் பணியாற்றிய காலத்தில் தனது மனைவியின் பெயரில் வாங்கிய சொத்து தொடர்பாக அவரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவில்லை. மேற்கண்ட பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. பிரகாஷ் தற்போது கன்னியாகுமரி மாவட்ட கல்லுக்கூட்டம் பேரூராட்சிக்கு மாறுதலில் சென்றுவிட்டதாலும், அவரது பணிப்பதிவேடு சேலம் மாவட்டத்திற்கு அனுப்பப்பட்டுவிட்டதாலும், அவரது பணிப்பதிவேட்டை இம்முறைமன்றத்தில் எங்களால் சமர்ப்பிக்க இயலவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். இந்நேர்வு தொடர்பாக ஒடுகத்தூர் பேரூராட்சி முன்னாள் உதவியாளர் திரு. பிரகாஷ் என்பவருக்கு அனுப்பப்பட்ட விளக்கம் கோரும் குறிப்பாணையின் நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். மேலும் வேலூர் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநரின் 24.11.2021 நாளிட்ட கடிதத்தினையும் எங்களது மேல் விளக்கமாக இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

7. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர் அவர்களது 24.11.2021 நாளிட்ட அறிக்கையில் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள வீடு வாங்கியது குறித்து உரிய விளக்கம் அளிக்கக்கோரி குறிப்பாணை கடிதம் ந.க.எண்.15/2020/ஆ நாள் 28.8.2020ல் காரணம் கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளதென்றும், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன்கீழ் மனுதாரரால் மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவில் அளிக்கப்பட்ட மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து முழுமையான தகவல்கள் ஏதும் அளிக்கப்படவில்லையென்று திரு. சி. ராஜவேலு என்பவரால் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், திரு. சி. ராஜவேலு என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.3980/2021வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர் மற்றும் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) ஆகியோர் இணைந்தளித்துள்ள 25.11.2021 நாளிட்ட வாக்குமூலத்தினைத் தொடர்ந்து, திரு. பா. பிரகாஷ், இளநிலை உதவியாளராக பணிபுரிந்த காலத்தில் வீடு வாங்கியதற்கு முறையாக முன்னனுமதி கோரி விண்ணப்பம் அளித்தாரா? அவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் முன்னனுமதி ஏதும் அவருக்கு வழங்கப்பட்டதா, அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின் அதற்கான பதிவுகள் தனியரது பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும், தனியர் வீடு கட்ட லோன் மூலம் (வங்கி லோனாக இருப்பினும்) ஏதேனும் பெற்றுள்ளதாக தனியரால் பணிநியமன அதிகாரிக்கு விவரம் அளிக்கப்பட்டதா என்ற விவரங்களை தனியரின் பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்து, அதற்கான ஆதாரங்களையும், பணிப்பதிவேட்டில்

பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அந்தந்த பக்கங்களின் நகல்களை எடுத்து சான்றொப்பமிட்டு அறிக்கையுடன் அனுப்பிவைக்குமாறு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம் மற்றும் நாகர்கோவில் மண்டலம், கன்னியாகுமரி மாவட்டம் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தினால் அறிவுறுத்தப்பட்டனர்.

9. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம், கன்னியாகுமரி அவர்களது **21.01.2022** நாளிட்ட அறிக்கையில் திரு. பா. பிரகாஷ், நாகர்கோவில் மண்டலத்திற்குட்பட்ட கல்லுக்கூட்டம் பேரூராட்சியில் **20.12.2021** முதல் செயல் அலுவலராக பணிபொறுப்பேற்று பணிபுரிந்து வருகிறார் என்றும், அன்னாரின் பணிப்பதிவேடு தமது அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறாததால், தனியரின் பணிப்பதிவேடு சேலம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருந்துவரும் நிலையில், உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), சேலம் மண்டலம் மூலம் மேலொப்பம் செய்து மின்னஞ்சல் மூலமாக பெறப்பட்ட சொத்து விபர அறிக்கை படிவம் மற்றும் தனியரின் பணிப்பதிவேட்டின் முன்பக்க ஒளிநகல்கள் தொடர் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம் அவர்களது அறிக்கையுடன் இணைத்தனுப்பப்பட்டுள்ள சொத்து விபர அறிக்கை படிவங்கள் I to V (as on 31.03.2021) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களால் சான்றொப்பமிடப்பட்டு அளிக்கப்பட்டுள்ளன. அவற்றில், படிவம் 1–ல் (Form No.I - Statement of Immovable Property held by Government Servants (e.g Land, House, Shops, Other Buildings etc)-) விவரங்கள் காலம் **1** முதல் **15** வரை விரிவாக கோரப்பட்டுள்ளன. இதில் காலம் 7–ல் If not in own name, state in whose name held and his/her relationship, if any, to the Government Servant என்ற தலைப்பிட்டு, அரசு ஊழியர் அல்லாது குடும்பத்தில் வேறு யாருடைய பெயரிலேனும் அசையா சொத்துக்கள் வாங்கப்பட்டிருப்பின், அவரது பெயர் மற்றும் அரசு ஊழியருக்கும் அவருக்குமான உறவு முறை ஆகியவற்றுடன் விவரங்கள் வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. எனினும், தனியரால் அளிக்கப்பட்டுள்ள மேற்படி படிவத்தில் அனைத்து கலன்களிலும் எந்தவொரு தகவல்களும் வழங்கப்படவில்லை. வெறும் வெற்று படிவங்களாக மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. படிவம் எண்.IV ல் தனியர் GPF Account No.142291 ல் மட்டும் ரூ.7,500/– (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) இருப்பில் உள்ளதாக காட்டப்பட்டுள்ளது.

10. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களது **21.01.2022** நாளிட்ட அறிக்கையில் திரு. பா. பிரகாஷ், செயல் அலுவலரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் தனியர் தனது மனைவி பெயரில் வீடு வாங்கியதற்கு/கட்டுவதற்கு முறையாக முன்னனுமதி கோரி விவரம் அளித்ததாகவோ, முன்னனுமதி வழங்கப்பட்டதற்கான பதிவுகளோ பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், வீடு கட்ட லோன் பெற்றுள்ளதாக தனியரால் பணி நியமன அலுவலருக்கு விவரம் அளிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் ஏதும் பதியப்படவில்லை என்றும், தனியர் வீடு வாங்கியது தொடர்பாக ஆவண நகல் எதனையும் சமர்ப்பிக்கவில்லை

என்ற விவரங்கள் தனியரது பணிப்பதிவேட்டினை முழுமையாக ஆய்வுசெய்து உறுதிசெய்து கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

11. முறையீட்டு மனுதாரரின் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரரின் வாக்குமூலம், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம் மற்றும் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) ஆகியோர் இணைந்தளித்துள்ள 25.11.2021 நாளிட்ட வாக்குமூலம் மற்றும் 24.11.2021 நாளிட்ட அறிக்கை, அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம், கன்னியாகுமரி அவர்களது 21.01.2022 நாளிட்ட அறிக்கை மற்றும் அறிக்கையுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள்/சொத்து தொடர்பாக திரு. பா. பிரகாஷ் என்பவரால் அளிக்கப்பட்ட படிவங்கள் (Forms I to V as on 31.03.2021) (உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), சேலம் மண்டலம், சேலம் அவர்களால் சான்றொப்பமிடப்பட்டவை) மற்றும் திரு. பா. பிரகாஷ் என்பவரது பணிப்பதிவேட்டின் முன்பக்க நகல்கள், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களது 21.01.2022 நாளிட்ட அறிக்கை ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

❖ திரு. பா. பிரகாஷ் (தற்போது நாகர்கோவில் மண்டலத்திற்குட்பட்ட கல்லுக்கூட்டம் பேரூராட்சியில் 20.12.2021 முதல் செயல் அலுவலராக பணிபுரிந்துவருபவர்) என்பவருக்கு கடந்த 2016–2017ல் 17B குற்றக்குறிப்பாணை அளிக்கப்பட்டு, தண்டனை பெற்றுள்ளவருக்கு 01.01.2018ல் செயல் அலுவலருக்கான முதுநிலைப்பட்டியலில் அரசு விதிகளை மீறி பெயர் சேர்க்கப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் எண்.3228/2020/A7 நாள் 12.05.2020ன்படி பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது குறித்தும், அவரது மனைவி திருமதி. ரஞ்ஜனி துர்காதேவி அவர்கள் பெயரில் ஊழல் செய்து ரூ.40 லட்சத்தில் சர்வே எண்.252/2, 252/8ல் 2017ல் வீடு வாங்கியுள்ளது குறித்தும் உரிய விசாரணை செய்து அவருக்கு வழங்கப்பட்ட முறையற்ற பதவி உயர்வை ரத்து செய்யுமாறும், ஊழல் பணத்தில் அவர் வாங்கியுள்ள வீட்டை ஜப்தி செய்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் மனுதாரரால் 24.6.2020ல் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

❖ இதே பொருள்குறித்து மனுதாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கு 22.5.2020ல் புகார் மனு அளித்துள்ளார். அதில் திரு. பா. பிரகாஷ், வேலூர் மாவட்டம், சோளிங்கரில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்தபோது நவம்பர் 2017ல் சோளிங்கர் இந்தியன் வங்கியில் ரூ.25.00 லட்சம் கடன் பெற்றும் மற்றும் ஊழல் செய்த பணத்தை வைத்தும் ரூ.50 லட்சத்திற்கு (பத்திர செலவு உட்பட) தனது மனைவி பெயரில் கடந்த 2017 நவம்பர், டிசம்பரில் வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி சத்துவாச்சாரி அருகிலுள்ள புதுவசூர் பேங்க் நகரில் வீடு வாங்கியுள்ளதாகவும், அதற்கு அரசின் முன்னனுமதியோ, பணிப்பதிவேட்டில் பதிவோ செய்யப்படவில்லை என்றும், அவர் அனுமதி பெறாமல் வாங்கிய மோட்டார் காரையும் பறிமுதல் செய்யவேண்டும் என்றும், அவருக்கு உறுதுணையாக இருந்த

உயர் அலுவலர்கள் மீதும் தக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளது தெளிவாகிறது.

❖ திரு. பா. பிரகாஷ், இளநிலை உதவியாளருக்கு செயல் அலுவலர் பதவி உயர்வு அளித்து வெளியிடப்பட்ட பேரூராட்சிகளின் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.3228/2020/அ7 நாள் 12.05.2020ஐ எதிர்த்து மனுதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிப்பேராணை (W.P.No.3980/2021) நிலுவையில் இருந்துவரும் நிலையில், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014, பிரிவு 10 (3) (b)ன்படி இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு உட்படாததால், தனியர் ஊழல் பணத்தில் வீடு வாங்கியுள்ளது குறித்து மட்டும் இம்முறைமன்ற நடுவத்தினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

❖ வேலூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திருமதி. தி. ஜீஜாபாய் மற்றும் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) திருமதி. கெ. ரேவதி ஆகியோர் அளித்துள்ள வாக்குமூலத்தில் திரு. பா. பிரகாஷ் ஒடுகத்தூர் பேரூராட்சியில் பணியாற்றிய காலத்தில் தனது மனைவியின் பெயரில் வாங்கிய சொத்து தொடர்பாக அவரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

❖ திரு. பா. பிரகாஷ் என்பவர் கடந்த 2017ல் வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி பேங்க் நகர் அருகில் புல எண்.235/2ல் புதிய வீடு வாங்கியுள்ளது குறித்து முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அளித்த புகார் மனு குறித்து உரிய விளக்கத்தினை ஏழு நாட்களுக்குள் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம் அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறும், தவறும் பட்சத்தில் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் திரு. பா. பிரகாஷ், முன்னாள் இளநிலை உதவியாளர், ஒடுகத்தூர் பேரூராட்சிக்கு 25.6.2020 நாளிட்ட விளக்கம்கோரும் குறிப்பாணை அனுப்பப்பட்டுள்ளது ஊர்ஜிதமாகிறது.

❖ தனியரிடமிருந்து இது தொடர்பான விளக்கம் ஏதும் சமர்ப்பிக்கப்பட்டதாக அறிக்கை மற்றும் வாக்குமூலங்களில் இடம்பெறவில்லை

❖ திரு. பா. பிரகாஷ் இளநிலை உதவியாளராக பணியாற்றியபோது வருமானத்திற்கு அதிகமாக ஊழல் செய்து லஞ்சப் பணத்தில் அவரது மனைவி பெயரில் 2017ல் வீடு வாங்கியுள்ளதாக எழுப்பப்பட்டுள்ள புகார் தொடர்ந்து எழுப்பப்பட்டு, நிலுவையில் இருந்துவரும் நிலையில், தனியர் தனது தெளிவான விளக்கத்தினையோ அல்லது துறை அளவில் உள்ள மேலதிகாரிகளோ ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்காதது கண்டனத்திற்குரியது.

❖ மேலும், தனியர் செயல் அலுவலராக பதவி உயர்வு பெற்று அதன் பின்னர் 31.03.2021 அன்றைய நாள் வரையிலான சொத்து விவரங்கள் அடங்கிய படிவங்களை சமர்ப்பித்துள்ளதன் (Forms I to V) அடிப்படையிலும், தன் பெயரிலோ அல்லது

தனது குடும்ப உறுப்பினர்கள் பெயரிலோ வாங்கப்பட்டுள்ள வீடு குறித்த விவரங்கள் எதனையும் வழங்காமல், அனைத்து காலங்களிலும் வெற்றுக் கோடிட்டு விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அளித்துள்ளது அறியமுடிகிறது. எனவே, திரு. பா. பிரகாஷ் தம் மீது எழுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டினை கண்டுகொள்ளாமல் மூடி மறைக்க முயற்சித்துள்ளார் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

- ❖ பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களது அறிக்கையில் திரு. பா. பரகாஷ், செயல் அலுவலரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்ததில் தனியர் தனது மனைவி பெயரில் வீடு வாங்கியதற்கு/கட்டுவதற்கு முறையாக முன்னனுமதி கோரி விவரம் அளித்ததாகவோ, முன்னனுமதி வழங்கப்பட்டதற்கான பதிவுகளோ பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், வீடு கட்ட லோன் பெற்றுள்ளதாக பணியரால் பணி நியமன அலுவலருக்கு விவரம் அளிக்கப்பட்தற்கான ஆதாரங்கள் ஏதும் பதியப்படவில்லை என்றும், தனியர் வீடு வாங்கியது தொடர்பாக ஆவண நகல் எதனையும் சமர்ப்பிக்கவில்லை என்ற விவரங்கள் தனியரது பணிப்பதிவேட்டினை முழுமையாக ஆய்வுசெய்து உறுதிசெய்து கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், மனுதாரர் திரு. C. ராஜவேலு என்பவரால் அளிக்கப்பட்டுள்ள புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திரு. பா. பிரகாஷ் சோளிங்கர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்தபோது தனது மனைவி திருமதி. ரஞ்ஜனி துர்காதேவி பெயரில் ரூ.40 லட்சத்திற்கு (ரூபாய் நாற்பது லட்சம் மட்டும்) வருமானத்திற்கு அதிகமாக ஊழல் செய்த பணத்தில் வீடு வாங்கியுள்ளதாக எழுப்பப்பட்டுள்ள புகார் குறித்து, அவரது விளக்கத்தினை ஏழு நாட்களுக்குள் சமர்ப்பிக்குமாறு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம் அவர்களால் விளக்கம் கோரும் குறிப்பாணை வழங்கப்பட்டும், அவர் அதற்கான விளக்கத்தினை அளிக்காதது அவர் மீதான குற்றச்சாட்டு ஊர்ஜிதமாகிறது. மேலும் அவர் இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்று செயல் அலுவலராக பணிப்பொறுப்பேற்ற பின்னர் அளித்துள்ள சொத்து விவரங்கள் குறித்து தாக்கல் செய்துள்ள ஆவணங்களிலும் (Forms I to V) தான் வாங்கியுள்ள வீடு குறித்த விவரங்கள் வழங்கப்படாமல், கோடிட்டு வெற்று படிவங்களாகவே அளித்துள்ளதால், இக்குற்றச்சாட்டுக்கு அவரே வலுசேர்த்துள்ளது வியப்பளிக்கக்கூடியது. அரசுப்பணியாற்றும் அலுவலர்கள் விதிமுறைகளை பின்பற்றாமலும், அரசின் சட்டதிட்டங்களின்படி உரிய தகவல்களை நேர்மையாக வழங்காமல் இருந்துள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது. மேலும் இத்தகைய புகார்களின் உண்மைத் தன்மையை ஆராயாமல் அதனை கண்டுகொள்ளாமல் மேலுள்ள அதிகாரிகள் அலட்சியமாக இருந்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ள 21.1.2022 நாளிட்ட அறிக்கையில் திரு. பா. பிரகாஷ், செயல் அலுவலர் தனது மனைவி பெயரில் வீடு வாங்கியதற்கு முறையாக முன்னனுமதி கோரி விண்ணப்பிக்கவோ, அதன் அடிப்படையில் முன்னனுமதி வழங்கப்பட்டதற்கான பதிவுகளோ, லோன் பெற்றுள்ளது குறித்து நியமன அலுவலருக்கு விவரம் அளித்தது, லோன் பெற்றுள்ளதற்கான ஆவண நகல்களை சமர்ப்பித்துள்ளது போன்ற எந்த பதிவுகளும்

தனியரது பணிப்பதிவேட்டினை முழுமையாக ஆய்வு செய்து உறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். எனவே, திரு. பா. பிரகாஷ், சோளிங்கர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணியாற்றிய காலத்தில் உரிய அனுமதி பெறாமலும், தனது மனைவி பெயரில் வாங்கியுள்ள வீடு குறித்த விவரங்களை முறையாக பணிப்பதிவேட்டில் பதிவு செய்யாமலும், தனது பதவி உயர்விற்குப் பின்னரும் இதுகுறித்த விவரங்களை முறையாக தெரிவிக்காமலும் இருந்துள்ளதால், இவர் அரசின் விதிமுறைகளை பின்பற்றாமல் மிகவும் அலட்சியமாக இருந்து வந்துள்ளதால், உரிய விதிகளின்கீழ் அவர் மீது கடும் குற்றங்களுக்குரிய பிரிவின்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு உரிய தண்டனை வழங்குமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது.

2022ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. C. ராஜவேலு,
H.4 பாலார் கார்டன், சத்துவாச்சாரி, வேலூர், வேலூர் மாவட்டம்–632 009
பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28
இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், வேலூர் மண்டலம், வேலூர்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், சேலம் மண்டலம், சேலம்
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், நாகர்கோவில் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கன்னியாகுமரி மாவட்டம் (இ) நாகர்கோவில்
திரு. பா. பிரகாஷ், செயல் அலுவலர், கல்லுக்கூட்டம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம் (பேரூராட்சிகளின் ஆணையாளர் மூலமாக)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் சென்னை–600 032

செயலாளருக்காக
1.2.2022